# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

**1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

தமிழரது பண்பாட்டு வரலாற்றைக் கூறும் நூல்
சிலப்பதிகாரம் .
(திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம்)

1. கூத்து ஆட்டங்கள் பார்க்க ______________________
இருக்கும்.
(இனிமையாக, அழகாக, வெறுப்பாக)

2. சேரனால் அஞ்சல் ______________________ .
(அனுப்பினான், அனுப்பப்பட்டது, அனுப்பினார்கள்)

3. ______________________ பாட்டியாக நடித்துச் சிறுமியை
ஏமாற்றியது.
(முயல், நரி, கரடி)

4. அதியமான் வேட்டையாடக் ______________________ச்
சென்றான்.
(காட்டுக்கு, நாட்டுக்கு, வீட்டுக்கு)

5. இனியன் பையைக் ______________________
ஒப்படைத்தான்.
(நண்பனிடம், காவலரிடம், பெற்றோரிடம்)

6. கோடைகாலத்தில் மரங்கள் ________________________ க் காட்சியளிக்கும்.
(வெண்மையாக, வெறுமையாக, பசுமையாக)

7. நரி ________________________ .
(கத்தும், ஊளையிடும், கதறும்)

8. திருக்குறளை ________________________ என்றும் கூறுவர்.
(சிவமறை, நான்மறை, பொதுமறை)

9. உண்மை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ________________________ .
(மெய், பொய், வாய்மை)

10. மான்குட்டி ________________________த் தாயிடம் ஓடியது.
(துள்ளித்துள்ளி, சிரித்துச்சிரித்து, தாவித்தாவி)

11. ஆத்திசூடியை எழுதியவர் ________________________ .
(கபிலர், ஔவையார், திருவள்ளுவர்)

12. காவியன் பாட்டுப் ________________________ .
(பாடுகிறான், பாடப்பட்டது, பாடப்படும்)

13. நாங்கள் ________________________ மாதம் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றோம்.
(தை, புரட்டாதி, மார்கழி)

14. ஒன்றுபட்டால் உண்டு ____________________ .

(வால்வு, வாழ்வு, வாள்வு)

15. 40 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்

____________________.

(நாற்பது, நார்ப்பது, நாப்பது)

16. சேந்தன் ____________________ பாடல் நன்றாக இருந்தது.

(பாடிய, ஓடிய, ஆடிய)

17. அதியமான் நெல்லிக்கனியை ____________________ க் கொடுத்தான்.

(திருவள்ளுவருக்கு, ஔவையாருக்கு, மோசிகீரனாருக்கு)

18. கூத்துகள் ____________________ இரவில் தொடங்கும்.

(முன், பின், நடு)

19. உடற்பயிற்சி என்ற சொல்லைப் பிரித்தால்

____________________ .

(உடல் + பயிற்சி, உடற் + பயிற்சி, உடல்ப் + பயிற்சி)

20. நாட்டின் மீது அன்பு கொள்வது ____________________ .

(வீட்டுப்பற்று, நாட்டுப்பற்று, மொழிப்பற்று)

புள்ளிகள் 20

**2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ~~சலசல~~ | சொரசொர | படபட | மளமள | கொழுகொழு | மடமட |

**எ - கா**

ஆற்றுநீர் சலசல என்று ஓடியது.

1. பார்கவி தண்ணீரை ____________ எனக் குடித்தாள்.
2. சேரன் விரைவாக ஓடியதால் அவனின் இதயம் ____________ என அடித்தது.
3. நரிப் பாட்டியின் உடம்பும் கையும் ____________ என்று இருந்தன.
4. குயிலி பள்ளிப் பாடங்களை ____________ என்று செய்து முடித்தாள்.
5. பனிக்கரடி ____________ என அழகாக இருந்தது.

புள்ளிகள் 05

**3) பார்த்து உறுப்பமைய எழுதுக.**

கல்விக்கு அழகு கசடற மொழிதல்.

________________________________

புள்ளிகள் 03

**4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேர்ந்து | பிடிக்க | இயற்றிய | சூடான | எடுத்து | ~~நெருங்கிய~~ |

**எ - கா**

**வேணியும் வேழனும் நெருங்கிய நண்பர்கள்.**

1. **சேரன் தெருவில் கிடந்த தடியை ____________ ஓரமாகப் போட்டான்.**

2. **இலக்கியாவும் இளநிலாவும் ____________ தமிழ்ப் பள்ளிக்குச் சென்றனர்.**

3. **அம்மா ____________ தேநீர் தந்தார்.**

4. **சிங்கம் மானைப் ____________ ஓடியது.**

5. **ஔவையார் ____________ நல்வழி சிறந்த நூல்.**

புள்ளிகள் 05

5) **கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

**எ - கா**

தமிழில் பல அறநெறி நூல்கள் ____உள்ளன____ .

1. நேற்று நடந்த ஆண்டுவிழாவில் சங்கவை பாட்டுப் ______________ .

2. சிறுமியை ஏமாற்ற நரி திட்டம் ______________ .

3. நாளைக்கு என் மாமா ஊரிலிருந்து ______________ .

4. இனியவள் ஐந்தாம் வகுப்பு ______________ .

5. தூயவனால் ஓவியம் ______________ .

6. நேற்று மாறன் பாடிய பாடல் நன்றாக ______________ .

புள்ளிகள் 12

6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நா | பா | ட் | டு | வீ | ணை | ஓ |
| ட | ம | | ந | யா | ழ் | வி |
| க | த் | ஏ | ட | | தா | ய |
| ம் | த | ழி | ன | மே | ள | ம் |
| இ | ள | ல் | ம் | | ம் | |
| சை | ம் | | சி | ற் | ப | ம் |

| இன்கலைகள் | இசைக்கருவிகள் |
|---|---|
| ஓவியம் | மேளம் |
| | |
| | |
| | |
| | |
| | |

எ - கா

புள்ளிகள் 10

7) **மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அறுவடை | மன்னார் | ~~பாடி~~ | கேட்க | கூத்துகள் | அழகாக |

முற்காலத்தில் மக்கள் நாடகங்களை இசையோடு பாடி ஆடி நடித்தனர். அவற்றைக் ______________ என்பர். இலங்கையில் பல இடங்களிலும் கூத்துகள் நடைபெறுகின்றன. மட்டக்களப்பு ______________, யாழ்ப்பாணம், மலையகம் ஆகிய பகுதிகளில் நடைபெறும் கூத்துகள் முதன்மையானவை. பொதுவாக நெல் ______________ முடிந்தபின் கூத்துகள் நடைபெறும். கூத்து ஆட்டங்கள் பார்க்க ______________ இருக்கும். கூத்துப் பாடல்கள் ______________ இனிமையாக இருக்கும்.

புள்ளிகள் 10

**8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.**

**எ - கா**

நடப்போம் / பெரியோரை / மதித்து / நாம்

நாம் பெரியோரை மதித்து நடப்போம் ______ .

1. ஒரு / சிறந்த / திருக்குறள் / அறநூல்

______ .

2. வந்தாள் / பாட்டியின் / சிறுமி / வீட்டுக்கு

______ .

3. மன்னன் / யாழ்ப்பாண / சங்கிலியன் / அரசின்

______ .

4. துளி / வெள்ளம் / பெரு / சிறு

______ .

5. எழுதினார் / பாடல்களை / ஔவையார் / சிறுவர்

______ .

புள்ளிகள் 10

9) பந்தியைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

எங்கள் தமிழ்ப்பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது. விழாவில் கவிதை, நாடகம், நடனம், போன்ற பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் நாடகம் நடித்தனர். நாடகத்தின் பெயர் சங்கிலியன். சங்கிலிய மன்னனாக நடித்த மாணவன் மிகவும் சிறப்பாக நடித்தான். அவனை எல்லோரும் பாராட்டினர். சங்கிலியனைப் பற்றி நான் இராண்டாம் வகுப்பில் கற்றேன். அதனால் அந்த நாடகக் கதை எனக்கு நன்றாக விளங்கியது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

எ - கா

ஆண்டுவிழா எங்கே நடைபெற்றது?

ஆண்டுவிழா தமிழ்ப்பள்ளியில் நடைபெற்றது ____________ .

1. ஆண்டு விழாவில் இடம் பெற்ற இரண்டு நிகழ்ச்சிகளின் பெயர்களைத் தருக?

____________________

2. எத்தனையாம் வகுப்பு மாணவர்கள் நாடகம் நடித்தனர்?

____________________

3. விழாவில் நடைபெற்ற நாடகத்தின் பெயர் என்ன?

____________________

4. யாரை எல்லோரும் பாராட்டினர்?


____________________

5. ஆண்டுவிழா எதனுடன் இனிதே நிறைவு பெற்றது?

____________________

புள்ளிகள் 10

10. படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15